بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡم    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡم    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

**இந்தோனேஷியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஸுல்ஃபிகார் அஹ்மது தாமானக் சாஹிப், பாகிஸ்தானைச் சார்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் பீர் முஹம்மது சாஹிப் மற்றும் லண்டனைச் சார்ந்த மதிப்பிற்குரிய குலாம் முஸ்தஃபா சாஹிப் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 மே 2020 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ - اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இப்போது நான், கடந்த சில நாள்களுக்கு முன்னர் மரணித்த சில மர்ஹூம்களைப் பற்றி கூறுவேன். அவர்களில் ஒவ்வொருவரும் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களின் கல்வித் தகுதி வெவ்வேறானதாகும். ஆனால் ஒரு விஷயம் அவர்கள் அனைவரிடமும் ஒன்றுபட்டிருந்தது. அது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக அவர்கள் செய்திருந்த பைஅத் வாக்குறுதியைத் தத்தமது சக்திக்கேற்ப நிறைவேற்றும் விஷயமும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுதலும், அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு முழுமையாகக் கட்டுப்படுதலும், கலப்பற்ற தொடர்பு கொள்ளுதலும், அடியார்களின் உரிமையை நிறைவேற்றுதலும் ஆகிய விஷயங்களில் ஒன்றுபட்டிருந்தனர். இவை அனைத்தும் இஸ்லாத்தின் அழகிய போதனையின்படி அமல் செய்ய வைப்பதற்காகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை நேசரை அனுப்பி இருந்தான் என்பதன் செயல் முன்மாதிரி அவர்களிடம் காணப்பட்டது என்பதைக் காட்டுகிறது. அடியாருக்கும் இறைவனுக்கும் இடையில் உண்மையான தொடர்பு ஏற்படுத்தும் உண்மையான நடைமுறை இதன் மூலம் நமக்கு தெரிய வருகிறது. இறைவன் உயிருடன் இருப்பது பற்றி முழுமையான திட உறுதியும், அவனது திருப்தியில் திருப்தி கொள்வதில் உயரிய தகுதியைப் பெறுபவர்களைப் பற்றியும் நமக்கு அறியக் கிடைக்கிறது.

அதில் ஒருவர் நமது ஜமாஅத் முபல்லிக் ஸுல்ஃபிகார் அஹ்மது தாமானக் சாஹிப் ஆவார். இவர் இந்தோனேஷியாவின் முபல்லிக் ஆவார். இவர் 21 ஏப்ரல் அன்று தமது 42 வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது தந்தைவழிப் பாட்டனார் மூலம் ஏற்பட்டது. 1997 முதல் 2002 வரை ஜாமிஆ அஹ்மதிய்யா இந்தோனேஷியாவில் கல்வி கற்றார். பிறகு இவருக்கு 18 வருடங்கள் பல்வேறு பகுதிகளில் முபல்லிக் ஆக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இவர் பல்வேறு பகுதிகளில் முபல்லிக் ஆக பணியாற்றி வந்தார். இவரது நினைவாக ஒரு மனைவி கண்ணியத்திற்குரிய மர்யம் சித்தீகா சாஹிபா மற்றும் நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

நமது முபல்லிக் மிஃராஜுத்தீன் சாஹிப் அங்கிருந்து கூறுகிறார்: ஸுல்பிகார் சாஹிப் மிகவும் வெற்றிக்குரிய உழைத்துப் பணி செய்யும் முபல்லிக் ஆவார். அவரது போஸ்டிங் எங்கு தரப்பட்டாலும் தர்பிய்யத் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் தப்லீக் பணிகளிலும் மிகவும் முழு மூச்சுடன் பணி செய்பவர். எவரிடமும் எதனையும் கேட்க மாட்டார். மாறாக, எப்போதும் துஆ செய்யுமாறு வேண்டுவார். இதுவே வாழ்வை அர்ப்பணித்தவரின் உயிர் ஆகும். எல்லாரிடமும் இந்த உணர்வு இருக்க வேண்டும். எப்போதும் எதையாவது வேண்டினால் இறைவனிடம் வேண்டுங்கள். எவரிடமும் எந்த வேண்டுகோளும் வைக்கக் கூடாது. இந்த சிறப்பம்சத்தை வாழ்க்கையை அர்ப்பணித்த ஒவ்வொருவரும் தம்மிடம் கொள்ள வேண்டும்.

முபல்லிக் ஆஸிஃப் மயீன் சாஹிப் கூறுகிறார்: இவர் நல்லடியாராக இருந்தார். மிகவும் கட்டுப்படுள்ளவர்.

மிகவும் நோயுற்ற நிலையிலும் கூட பெரும் நோயுற்றிருந்தார் என்ற போதிலும் ஜமாஅத் சேவைக்கு முன்னுரிமை வழங்கினார். இவர் டயாலிஸிஸ் செய்திருந்தார். இந்த நிலையிலும் உள்ளூர் கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கிருந்து ஒரு காதிம், ஏன் இவ்வளவு சிரமம் மேற்கொள்கிறீர்கள்? என்று கேட்டபோது, எனது உயிர் இருக்கும் வரை ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முயற்சி செய்வேன் என்றும், நான் நோயுற்றிருந்தும் கூட எனது விருப்பம் மார்க்கச் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதாகும் என்றும் கூறினார்.

இதுவே ஒரு வாழ்வை அர்ப்பணித்தவரின் உணர்வு ஆகும். ஒவ்வொரு வாழ்வை அர்ப்பணித்தவரிடமும் இந்த உணர்வு இருக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இவர் மிகவும் உறுதியான எண்ணத்துடன் தமது உடன்படிக்கையை நிறைவேற்றுபவராக இருந்தார். அல்லாஹ் இவரது தகுதிகளை உயர்த்துவானாக. இவரது மனைவி மக்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக. தானே அவர்களின் பாதுகாவனாக இருப்பானாக.

இரண்டாவது மர்ஹூம் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்திலுள்ள டாக்டர் பீர் முஹம்மது நகியுத்தீன் சாஹிப் பற்றி கூறுவேன். இவர் 18 ஏப்ரல் அன்று வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் மரணமடைவதற்கு ஒரு வாரம், 10 நாட்களுக்கு முன்பு கொரானா வைரஸின் தொற்று ஏற்பட்டதன் அறிகுறி வெளிப்பட்டது. ஏப்ரல் 18 ஆம் தேதி அல்லாஹ்வின் முன் சென்று சேர்ந்து விட்டார். மர்ஹூமின் நினைவாக மனைவியுடன் ஒரு மகன் நான்கு மகள்கள் இருக்கின்றனர். இவர்களது தந்தைவழி தாய்வழி குடும்பம் முழுவதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகளின் சந்ததிகளாவர். நாட்டின் பிரிவினையின்போது ஒரு வயதை உடையவராக இருந்தார். 1970 –ல் நிஸ்தர் மெடிக்கல் காலேஜில் எம்.பி.பி.எஸ் செய்தார். இஸ்லாமாபாத்தில் தமது கிளினிக் ஒன்று திறந்தார். 25–30 வருடங்கள் அங்கு அல்லாஹ்வின் அருளால் வெற்றிகரமாக கிளினிக் நடத்தி வந்தார். ஏழைகளுக்கு சேவை செய்து வந்தார்.

இஸ்லாமாபாத் ஜமாஅத்தின் அமீர் டாக்டர் அப்துல் பாரி சாஹிப் எழுதுகிறார்: டாக்டர் நகியுத்தீன் சாஹிப் கடந்த 12 வருடங்களாகத் தொடர்ந்து பாகிஸ்தான் இஸ்லாமாபாத் ஜமாஅத்தின் காஸி ஆக சேவை செய்து வந்தார். இவரது தீர்ப்புகள் எப்போதும் திருக்குர்ஆன் சுன்னத் அடிப்படையில் அமைந்திருக்கும். இரு தரப்பினருக்கும் மிகவும் திருப்திகரமானதாக அமைந்திருக்கும். இனிய நடைமுறை உள்ளவராகவும், பரிவுள்ளவராகவும் ஏழைகளின் மீது பரிவுடன் நடக்கக் கூடியவராகவும் இருந்தார். எல்லாருடனும் புன்னகைத்த முகத்துடன் சந்திப்பார். இறைப் படைப்பினங்களுக்கு சேவை செய்ய முன் நிற்பவராக இருந்தார். ஜமாஅத்தின் ஏழை மற்றும் நாதியற்ற மக்களுக்கு இவரது கிளினிக் எப்போதும் திறந்தே இருந்தது.

இவரது மனைவி கூறுகிறார்: எனது கணவர் மிகவும் கலப்பற்ற மற்றும் பற்றுள்ள அஹ்மதி ஆவார். கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர் ஆவார். முன்மாதிரியான கணவராகவும், பரிவு மற்றும் அன்புடன் நடக்கக்கூடிய தந்தையாகவும், சகோதர சகோதரிகள் மற்றும் நண்பர்களை மிகவும் அதிகமாக கருத்தில் கொள்ளக்கூடிய மக்களுக்கு பயனளிக்கக்கூடிய நபராகவும் இருந்தார்கள். உயிருள்ள இறைவனுடன் ஆழமான தொடர்பு இருந்தது. அதிகமாக துஆ செய்யக்கூடியவர் ஆவார்.

இவரது மகள் கூறுகிறார்: சிறு வயதிலேயே தொழுவது, திருக்குர்ஆன் ஓதுவது, நோன்பு நோற்பது, குறித்த நேரத்தில் சந்தாவை செலுத்துவது, தான தர்மங்களை செய்வது ஆகியவற்றிற்கான பழக்கத்தை எங்களிடம் எங்களின் தந்தை ஏற்படுத்தினார்கள்.

பிறகு அவரது மகன் பீர் முஹ்யித்தீன் சாஹிப் கூறுகிறார்: நான் கனவில் பார்த்தேன். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் எமது வீட்டிற்கு வந்து தர்ஸ் கொடுக்கிறார்கள். பிறகு என்னைப் பார்த்துக் கூறுகிறார்கள்: 'உமது தந்தை ஒரு வலியுல்லாஹ் ஆவார்கள்'.

அல்லாஹ் இவர்களது அந்தஸ்தை உயர்த்துவானாக.

அடுத்த குறிப்பு மதிப்பிற்குரிய குலாம் முஸ்தஃபா சாஹிப். இவர் இலண்டனில் இருந்தார். இவர் தன்னார்வத் தொண்டராவார். யூ.கே. –வின் தனிச் செயலர் அலுவலகத்தில் பணி செய்தார். இவருக்கு 25

ஏப்ரல் அன்று வஃபாத் ஏற்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

**1983** –ல் இவர் பைஅத் செய்தார். இவர் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் கிடையாது. ஆனால் இவர் வாழ்வை அர்ப்பணித்தவர் போன்று வாழ்ந்து வந்தார். மிகவும் பற்றுணர்வுடன் அல்லாஹ்விடம் செய்த வக்ஃபின் உடன்படிக்கையை இவர் நிறைவேற்றினார். **1993** –ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தனிச் செயலர் அலுவலகத்தில் இவருக்கு டியூட்டி தந்தார்கள். அதிலிருந்து இதுவரை மனமுவந்து தமது டியூட்டியைக் கொடுத்து வந்தார். மர்ஹூம் மூஸி ஆக இருந்தார்.

இவரது மனைவி மஹ்மூதா முஸ்தஃபா சாஹிபா எழுதுகிறார்: நானும் முஸ்தஃபா சாஹிப் அவர்களும் ஏறக்குறைய **34** வருடம் ஒன்றாக இருந்துள்ளோம். இறைவன் மீது ஆணையாக! இக்காலத்தில் இவரது ஒவ்வோர் அடியும் இறைவனுக்காகவே இருந்தது. கலப்பற்ற கணவராகவும், தந்தையாகவும், சகோதரராகவும், நண்பராகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். உறவுகளைப் பேணக் கூடியவர். கிலாஃபத்திற்காக தம்மை மாய்த்து விடும் இருப்பாக இருந்தார். பொருள் தியாகத்தில் பெரும் ஆர்வம் இருந்தது.

இவரது மகள் சபியா முஸ்தஃபா கூறுகிறார்: எனது தந்தையாரின் வாழ்வின் நோக்கம் அல்லாஹ்வின் இருப்பு மற்றும் கிலாஃபத் அமைப்பை நேசிப்பதாக இருந்தது. ஏழைகளுக்கு அதிகமாக உதவி செய்து வந்தார்கள். எப்போதும் ஜமாஅத்துடன் இணைந்திருக்க வேண்டும்; தொழ வேண்டும். திருக்குர்ஆனை தொடர்ந்து ஓத வேண்டும். பிறகு அல்லாஹ் உதவி செய்வான் என்று கூறினார்கள்.

மேலும் சந்தா செலுத்துவதில் ஒருபோதும் பிறப்டுத்தக் கூடாது என்று அறிவுறுத்தவார்கள். மேலும் மாதத்தின் முதல் நாளிலேயே தாம் சந்தாவை வழங்கி விடுவார். ஜமாஅத்திற்கு நமது சந்தா தேவை என்று நினைக்கக் கூடாது. சந்தா மூலமாக நாம்தான் அல்லாஹ்வின் நிஃமத்துகளை அனுபவிக்கிறோம் என்றார்.

டாக்டர் இப்ராஹிம் நாஸிர் பட்டி சாஹிப் கூறுகிறார்: கொரோனா வைரஸின் தொற்றின் கடுமையால் இவர்களுக்கு CPAC பொருத்தப்பட்டது. இதன் காரணமாக மிகவும் மோசமான நிலை ஏற்பட்டு விடுகின்றது. அவர்கள் கஷ்டத்தை உணரும்போது அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அவர்களிடம், மருத்துவர்களின் வழிகாட்டலுக்கேற்ப செயல்படுமாறு ஹுஸூர் அவர்கள் கூறியுள்ளார்கள் என்று கூறுவார்கள். எனது வழிகாட்டல் கிடைத்ததும் அவர் ரிலேக்ஸ் ஆகிவிடுவார்.

அல்லாஹ் இந்த எல்லா மர்ஹூம்களின் தகுதிகளையும் உயர்த்துவானாக. அல்லாஹ் மற்றும் அவனது மார்க்கத்துடன் கொண்ட விசுவாசத்தையும் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியதையும் பார்த்து அதனை விட அதிகமாக அவர்கள் மீது தமது அன்பைப் பொழிவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று இம்மக்கள் ஷுஹதாக்களில் அடங்குவர். அல்லாஹ் இவர்களின் சந்ததிகளையும் தமது பாதுகாப்பில் வைப்பானாக. அவர்களின் நன்மைகளை தமது வாழ்வில் கைக்கொள்ளும் வாய்ப்பை வழங்குவானாக. அவர்கள் அல்லாஹ்விடம் தொடர்புள்ளவர்களாக வாழ்வார்களாக. அல்லாஹ் மற்றும் ஜமாஅத்துடன் பற்றுமிக்க தொடர்பு கொள்பவர்களாக ஆவார்களாக. பெற்றோர்கள் அவர்களுக்கு செய்த துஆக்களை இவர்களின் ஹக்கில் நிறைவேற்றுவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ
اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ
لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ. عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**